*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*11.08.2025                7 15*
*திங்கட்கிழமை                காலை*

*தலைப்புச் செய்திகள்*

- *நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று திறந்து வைக்கிறார்.*
- *மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை தெலங்கானா மாநிலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.*
- *விண்வெளித் துறையில் மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.*
- *ஈராக்கில் ரசாயன வாயுக் கசிவு காரணமாக 600க்கும் அதிகமான யாத்ரீகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.*
- *இந்தியா ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.*

*--- இனி விாிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

*நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று திறந்து வைக்கிறார்.*

*நாடாளுமன்றம் அருகே உள்ள பாபா கரக் சிங் மார்க் பகுதியில் கட்டப்பட்டுள்ள இந்த புதிய குடியிருப்புகள், சூரியசக்தி மின்வசதி உட்பட பசுமைத் தொழில்நுட்பத்துடன், நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.*

*ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை நினைவுகூறும் விதமாக சிந்தூர் மரக்கன்றை நடும் பிரதமர், கட்டுமானப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுடனும் கலந்துரையாட உள்ளார்.*

**<<<<>>>>**

*மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை தெலங்கானா மாநிலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.*

ஹைதராபாதில் பிரதமரின் மக்கள் மருந்தக கிடங்கு திறப்பு விழாவில் பேசிய அவர், இந்தப் புதிய மையம் இம்மாநிலத்தில் தரமான மருந்துகள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் என்றார்.

மக்கள் மருந்தகம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்கள் ஏழைகளின் மருத்துவச் செலவை பெருமளவு குறைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் மருந்தகங்களில் சந்தை விலையை விட 50 முதல் 90 சதவீதம் குறைவான விலையில் மருந்துகள் கிடைப்பதாகவும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் சுமார் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர்க் காப்பீட்டுத் தொகையை மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் பயனாளிகளுக்கு வழங்குகிறார்.

இந்த நிகழ்ச்சியில் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஆயிரத்து 156 கோடி ரூபாயும், ராஜஸ்தான் விவசாயிகளுக்கு ஆயிரத்து 121 கோடி ரூபாயும் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட உள்ளது.

பிற மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 773 கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெதிவிக்கிறார்.

<<<<>>>>

விண்வெளித் துறையில் மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

வானியல் சார்ந்த 18வது ஒலிம்பியாட் போட்டிகள் மும்பையில் இன்று தொடங்குவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விண்வெளி அறிவியலில் மாணவர்களின் பங்கேற்பு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

*இந்தப் போட்டியில் 60க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 300 மாணவர்கள் பங்கேற்பதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

*ஈராக்கில் ரசாயன வாயுக் கசிவு காரணமாக 600க்கும் அதிகமான யாத்ரீகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*புனித நகரங்களான நஜஃப் மற்றும் கர்பலாவுக்கு இவர்கள் யாத்திரை சென்றுகொண்டிருந்த வேளையில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட குளோரின் வாயு கசிவால் மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து அவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.*

*நபிகள் நாயகத்தின் பேரன் உசைனின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் நடைபெற்ற யாத்திரையின்போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.*

**<<<<>>>>**

*மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளால் எரிசக்தி துறை சிறப்பான வளர்ச்சியைக் கண்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உலக அளவில் பொருளாதார மந்தநிலை நிலவியபோதிலும் இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு திறன் ஆண்டுக்கு 258 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்தியாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், குஜராத் மாநிலம் ஜாம்நகரில் ஆசியாவின் மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இரண்டரை லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் புதிதாக எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா தற்போது 4வது பெரிய பொருளாதார நாடாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு பெருமளவு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

கேலோ இந்தியா அஸ்மிதா கால்பந்துப் போட்டிகள், விளையாட்டுத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் என்று மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் ஜல்காவ்னில் இந்தப் போட்டிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கால்பந்து விளையாட்டில் சிறந்து விளங்கும் இளம் பெண் திறமையாளர்களை கண்டறிந்து அவர்களது திறமையை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்றார்.

பழங்குடியினர் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தவும் இந்தப் போட்டிகள் உதவிகரமாக அமையும் என்று திருமதி ரக்ஷா கட்சே நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

மருத்துவம் மற்றும் கல்வித்துறைகள் வணிகமயமாவதை தடுத்து குறைந்த செலவில் சேவைகள் கிடைப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் புற்றுநோய் மருத்துவமனை தொடக்க விழாவில் பேசிய அவர், பண்டைக் காலத்தில் கல்வியும், மருத்துவமும் மக்களுக்கான சேவையாக கருதப்பட்டதாக கூறினார்.

ஆனால் தற்போது இவை சாதாரண மக்களுக்கு எட்டாக் கனியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*எனவே கல்வி மற்றும் மருத்துவ சேவைகளை லாப நோக்கமின்றி வழங்க வேண்டும் என்றும் திரு. மோகன் பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.*

**<<<<>>>>**

*காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தியின் கணவர் திரு. ராபர்ட் வத்ராவுக்கு தொடர்புடைய 7 நிறுவனங்கள் சட்டவிரோத பணப் பரிவர்த்தனையில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ளது.*

*ஹரியானா மாநிலம் குருகிராமில் நடைபெற்ற நில பேரத்தில் இந்த நிறுவனங்களுக்கு தொடர்பிருப்பதாக சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*இந்த நில பேரத்தில் ராபர்ட் வத்ரா முறைகேடாக சுமார் 58 கோடி ரூபாய் பெற்றதாகவும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக வத்ராவுக்கு சொந்தமான அசையா சொத்துகள் உள்ளிட்டவை ஏற்கனவே அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

*இரண்டு தொகுதிகளில் வாக்காளர் அடையாள அட்டை வைத்துள்ள குற்றச்சாட்டு குறித்து வரும் 14ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு பீஹார் துணை முதலமைச்சர் திரு. விஜய்குமார் சின்ஹாவிற்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*அவரது பெயர் பாங்கிபுர் மற்றும் லக்கிசராய் ஆகிய 2 தொகுதிகளின் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டிருப்பதை அடுத்து இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது,*

**<<<<>>>>**

*உத்தராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், சிக்கிம் மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*ஹரியானா, தில்லி, பஞ்சாப், மத்தியப்பிரதேசம், பிஹார், அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் இன்று இழயுடன் கூழய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மகாராஷ்டிரா, ஒடிசா, சத்திஸ்கட், ஜார்கண்டின் சில பகுதிகளில் நாளை மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

**<<<<>>>>**

*லண்டனில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட 400க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.*

**<<<<>>>>**

*துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவாகியுள்ளது.*

**<<<<>>>>**

*இந்தியா ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.*

*புவனேஸ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 200 மீட்டர் ஓட்டப் பிரிவில் Animesh Kujur-ம், Triple Jump பிரிவில் அப்துல்லா அபுபக்கரும், மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் Shaili Singh-ம் ஈட்டி எறிதல் பிரிவல் Annu Rani-யும் தங்கப் பதக்கம் வென்றனர்.*

*ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில் முரளி ஸ்ரீசங்கர் தங்கப் பதக்கத்தையும், ஷாநவாஸ் கான் வெள்ளிப் பதக்கத்தையும், லோகேஷ் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.*

*ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் Shivam Lohakare வெள்ளிப் பதக்கம் வென்றார்.*

**<<<<>>>>**

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் ரக்பீ சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.*

*பீஹாரில் நடைபெற்ற இப்போட்டியின வெண்கப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 12-5 என்ற புள்ளிக் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.*

**<<<<>>>>**

**சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் நான்காவது சுற்றில் இந்தியாவின் நிஹால் சரீன் அர்ஜுன் எரிகைசியை வென்றார்.**

**<<<<>>>>**